மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 130/2016</u>

2026ம் ஆண்டு ஜுலை 07ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமியாத்தாள் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>07.07.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தகப்பனார் பெயர் முத்தப்ப நாடார் என்று சொன்னால் சரிதான். அவரது சகோதரர்கள் தான் கருப்பண நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் என்கிற காட்டப்பன் என்று சொன்னால் சரிதான். மேற்படியார்களின் வாரிசுகளை இந்த வழக்கில் நான் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதற்கு பின்னிட்டு தரப்பினர்களாக சேர்த்து உள்ளேன் என்று சொன்னால் ஆமாம். கருப்பண்ண நாடார் என்பவருக்கு 2 மகன்கள் அவர்கள் பெயர்கள் பெரிய பழனியப்பன் நாடார் மற்றும் சின்ன பழனியப்ப நாடார் என்று சொன்னால் ஆமாம் பெரிய பழனியப்பன் நாடார் என்பவரின் முதல் மனைவி இறந்துவிட்டார் என்றும் அவர்களுக்கு அர்ஜுனன் மற்றும் பருவதம் ஆகியவர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. அர்ஜுனன் மற்றும் பருவதம் ஆகியவர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சேர்த்து இருப்பேன் என்று நினைக்கிறேன். பெரிய பழனியப்ப நாடார் என்பவரின் இரண்டாவது மனைவியான பொன்னம்மாள் என்பவர் இந்த வழக்கில் 23 ஆம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் ஆமாம் பெரிய பழனியப்ப நாடார் என்பவருக்கு இரண்டாம் மனைவி மூலம் 22 ஆம் பிரதிவாதியும் மற்றும் துளசிமணி, அருக்காணி, சௌந்தரம், முத்துப்பிள்ளை ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

3. துளசிமணி என்பவர் இறந்து விட்டார் என்றால் ஆமாம். அவர் கணவர் பெயர் லட்சுமணன் என்றும், அவருடைய வாரிசுகள் பெயர்கள் ஷர்மிளா சங்கீதா மற்றும் சக்திவேல் என்றால் ஆமாம். துளசி மணியின் வாரிசுகள் மற்றும் அருக்காணி, சௌந்தரம், முத்துப்பிள்ளை ஆகியோர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

4. அறிவிப்பு கொடுத்தேன் அவர்கள் வாங்கவில்லை. கிட்டப்ப நாடார் என்பவரின் ஒரு மகனான செல்லப்பன் என்பவருக்கு 12–ம் பிரதிவாதி மனைவி என்றும், அவர்களுக்கு 13 ஆம் பிரதிவாதியும் மற்றும் சுதா, லதா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் ஆமாம். மேற்படி சுதா ,லதா ஆகியோர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். கிட்டப்ப நாடாரின் ஒரு மகளான சம்பூர்ணம் என்பவரை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. சின்ன பழனியப்பன் நாடார் என்பவரின் ஒரு மகள் பெயர் சௌந்தரம் அவர் பெரலக்காட்டுவலசில் உள்ளார் என்றால் ஆமாம். அவரை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன். நான் இந்த வழக்கில் கருப்பண்ண நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் என்கிற காட்டப்பன் என்பவரின் அனைத்து வாரிசுகளையும் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு உரிய தரப்பினர்களை சேர்க்க தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6. சொத்து விபரத்தில் நான் எந்த மாற்றமும் செய்யவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலைகளில் உள்ள மொத்த சொத்துக்களையும் சேர்க்காமல் பகுதி சொத்துக்களை மட்டும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின் அடிப்படையில் தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

7. நான் வழக்குரை சொத்துவிபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து பொறுத்து ஆவணங்கள் எதுவும் கிடையாது என்று சொன்னால் கூட்டு பட்டா உள்ளது பத்திரங்கள் எதுவும் இல்லை. வா.சா.ஆ.9 ஆவணத்திற்கு உண்டான தீர்ப்பாணையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் இந்த வழக்கத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த விதமான உரிமையும்

கிடையாது என்றும் இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.07 19:25:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்